# ஜனவரி – 21 – திங்கள்

## புனித அக்னஸ்

### “மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே“ – திபா 110 : 4

### முதல் வாசகம் : எபிரேயர் 5 : 1 - 10

சகோதர சகோதரிகளே! தலைமைக்குரு ஒவ்வொருவரும் மனிதர டமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்து வதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப் படுகிறார். அவர் தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால், அறியாமையில் இருப்போருக்கும் நெறி தவறி நடப்போருக்கும் பரிவு காட்டக் கூடியவராயிருக்கிறார். அவர் மக்களுடைய பாவத்திற்குக் கழுவாயாகப் பலி செலுத்துவது போல, தம் வலுவின்மையின் பொருட்டுத் தமக்காகவும் பலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார். மேலும், யாரும் இம்மதிப்புக்குரிய பணியைத் தாமே தேர்ந்துகொள்வதில்லை. ஆரோனுக்கு வந்தது போன்று கடவுளிடமிருந்தே அழைப்பு வரவேண்டும். அவ்வாறே கிறிஸ்துவும் தலைமைக் குருவாகத் தம்மையே உயர்த்திக் கொள்ளவில்லை. ”நீர் என் மைந்தர் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்” என்று அவரிடம் கூறியவரே அந்த மேன்மையை அவருக்கு அளித்தார். இவ்வாறே மற்றோரிடத்தில், ”மெல்கிச தேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே” என்றும் கூறப்பட்டுள்ளது. அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் நிறைவுள்ளவராகி, ”தமக்குத் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார். ”மெல்கிசதேக்கின் முறைப்படி வந்த தலைமைக் குரு” என்று கடவுள் அவருக்குப் பெயர் சூட்டினார்.

**பதில்பாடல் :** மெல்கிசதேத்தின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே

### நற்செய்தி : மாற்கு 2 : 18 – 22

யோவானுடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்துவந்தனர். சிலர் இயேசுவிடம், ”யோவானுடைய சீடர்களும் பரிசேயருடைய சீடர்களும் நோன்பிருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை?” என்று கேட்டனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் நோன்பு இருக்கமுடியுமா? மணமகன் அவர்களோடு இருக்கும் காலமெல்லாம் அவர்கள் நோன்பிருக்க முடியாது. ஆனால் மணமகன் அவர்களைவிட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை. அவ்வாறு ஒட்டுப்போட்டால், அந்த புதிய துணி பழையதிலிருந்து கிழியும்? கிழிசலும் பெரிதாகும். அதுபோலப் பழைய தோற்பைகளில், எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றிவைத்தால் மது தோற்பைகளை வெடிக்கச் செய்யும் மதுவும் தோற்பைகளும் பாழாகும். புதிய மது புதுத் தோற்பைகளுக்கே ஏற்றது” என்றார்.

**தியானம்:** “மனித நினைவுகள் அல்ல இறை சித்தம்” என்பதனை இன்றைய நற்செய்தி தெளிவாக்கி எம்மை நாமே சுய ஆய்வு செய்யவும் அழைக்கிறது. “யோவானுடைய சீடர்களும், பரிசேயருடைய சீடர்களும் நோன்பிருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை?” (மாற்கு2:18) என்பதற்கு “எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை” (மாற்கு2:21) என ஆண்டவர் இயேசு பதில் கொடுப்பதனால், தாம் அனைவரதும் மீட்பர் மட்டுமல்ல, உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனப் பாகுபாடு பார்ப்பதில்லை என்பதனையும் நிரூபிக்கின்றார். சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் எம்மை இறைவனை நோக்கி அழைத்துச் செல்லாது. மாறாக ஆழ்ந்த விசுவாசமும், உண்மையான உளமார்ந்த அர்ப்பணிப்பு வாழ்வே முக்கியம். அன்று இயேசுவின் சீடர்கள் முழுமன அர்ப்பணிப்போடு பின்தொடர்ந்ததனால் சம்பிரதாயங்கள், யூத மதச்சட்டமீறல்கள் இறைபார்வையில் உடைக்கப்பட்டதாக நற்செய்தி சான்றளிக்கிறது. இவ்வுலக செல்வங்கள், சுகபோகங்கள், பதவி நிலைகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள், சாதியப் பெருமைகள் அனைத்தும் குப்பை எனக்கருதுவோம். “மனித உணர்வுகள் அல்ல இறைசித்தம்” என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். “கல்லினுள் தேரைக்கும் புல்லினுள் பூவிற்கும் வாழ்வளிப்பவர்” எம்மையும் அனுதினமும் போசிக்க விரும்புகின்றார். இறைமகன் இயேசுவின் திருப்பாதம் சரணடைவோம். இறைமகன் இயேசு எமக்காக அனைத்தையும் செய்து முடிப்பார் என நம்பி விசுவசிப்போம். மனிதனோ குலம் கோத்திரம் பார்க்கின்றான். இறைவனோ உள்ளத்தின் ஆழத்திலுள்ள விசுவாசத்தைக் கூர்ந்து கவனிக்கிண்றார். ஆதலால் இறுதி நாளில் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நாம் நடக்க நேர்ந்தாலும் எமது எதிரிகள் நாணி வெட்கப்படும் அளவிற்கு எமது நல்ல ஆயன் இயேசு எம்மை மீட்டுக்கொள்வார் என்ற நம்பிக்கையோடு அவரையே நோக்கிய எமது பயணத்தைத் தொடருவோம்.